1990 மார்ச் 19]

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் உள்ள ஜோதிமா நகர் பகுதியில் இருக்கின்ற அந்தச் சுற்றுச்சுவர் இடிந்து விழுகிற சூழ்நிலையில் இருக்கிறது. உடனடியாக அந்தப் பகுதியில் ஒரு சிறிய பாலத்தைக் கட்டி அண்ணா சாலைக்கு ஒரு நேரடி வழிவகையைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை)

சேலம் மாவட்டத்தில் குளுகோஸ் தொழிற்சாலை.

*464—திரு. ஏ. சுப்பு: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் ''சேகோஸ்டார்ச்'' பயன்படுத்தி குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டத்தில் தொழிற்கூட்டுறவு துறையில் சாகோ ஸ்டார்ச்சைப் பயன்படுத்தி குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஏ. சுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தர்மபுரி மாவட்டங்களில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியாவதால் அதற்காக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க கூட்டுறவுத் துறையின் மூலம் குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்த இனியாவது அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து குளுகோஸ் தயாரிப்பதற்கு உற்பத்திச் செலவு மற்ற மூலப் பொருட்களிலிருந்து குளுகோஸ் தயாரிப்பதை விட அதிகமாகிற காரணத்தால் அந்தத்துறையில் ஈடுபட்டவர்கள் ஏற்கெனவே நஷ்டத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஏற்கெனவே 3 தனியார் தொழில் நிறுவனங்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு உற்பத்தியை அதிகரிக்க இயலாத ஒரு சூழ்நிலையில் அந்த நிறுவனங்கள் செயல்படாமல் இருக்கின்றன. எனவே மேலும் கூட்டுறவுத் துறையில் அதைப்போன்ற தொழிற்கூடத்தைக் கட்டும் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தமுடியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளதால் கூட்டுறவுத் துறையின் மூலம் சேகோ ஸ்டார்ச்–ஐ தயாரிக்கும் தொழிற் சாலையாவது ஏற்படுத்த அரசிடம் குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை,

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாக உற்பத்தி ஆகிற காரணத்தால் நவீன கிழங்கு அறவை மில் கட்டுவதற்கு அரசு மானியத்தோடு கூடிய தவணை முறை திட்டக் கடன் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(9-50 மணி)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதுபற்றிய தனிக் கேள்வி எழுப்புவார்களேயானால் அதற்குண்டான பதில் தரப்படும்.

கல்வராயன் மலையில் சேகோ தொழிற்சாலை அமைத்தல் .

*786—திரு. செ. பெருமாள்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா;—

(அ) கல்வராயன் மலையில் சேகோ தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கல்வராயன் மலைப் பகுதியில் சாகோ தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அங்கு தரமான மரவள்ளிக் கிழங்கு கிடைக்கிறது. அவை அனைத்தும் நகரத்திற்குக் கொண்டுவரப் பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அதைச் சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைப்பதில்லை. வாடகை அனைத்தையும் விவசாயிகளிடத்திலேதான் வசூலிக்கி றார்கள். பயிரிடுபவர்களுக்குப் பலன் கிடைப்பதில்லை. ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து கூட்டுறவு மூலமாக சாகோ பாக்டரி ஒன்றை அமைத்துத் தந்தால் நன்மையாக இருக்கும். ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.